இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.
Chundikuli Branch Library
6 JUL 1988
Chundikuli Branch Library

# தொழிலாளர் பாதை

விலை 1.50

வெளிவந்து விட்டது . . .

இலங்கை — இந்திய ஒப்பந்தமும்
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்
(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின்
அறிக்கை 1987 — நவம்பர் — 19)

விலை ரூ. 2/=

தொடர்பு கொள்க.

ஆனந்த வக்கும்புற
இல. 90, 1 ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10

★ மாதமிரு இதழ் ★ இதழ் 384 ★ 1988 மே 27 வெள்ளிக்கிழமை

# தோட்ட தொழிலாள இளைஞரை விடுதலை செய்!
# தோட்ட தொழிலாளரின் குடியுரிமைக்கு போராடு!

**நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்பட்டு உள்ள தோட்டத் தொழிலாள இளைஞர்களை மீட்பதற்காகவும், தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமைக்காக போராடவும் அனைத்து தொழிலாள வர்க்க இயக்கத்தை உடனடியாக அணிதிரட்டுவது அவசியம்.**

தற்போது 160 க்கு அதிகமான தோட்டத் தொழிலாள இளைஞர்கள் மகசின், பூசா, போகம்பரை சிறைகளிலும், பல்வேறு பொலிஸ் சிறைகளிலும், இரகசிய பொலிசின் சித்திரவதைச் சாலைகளிலும் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் பலர் நான்கு வருடங்களுக்கு மேலாக இச் சிறைகளில் சித்திரவதைகளுக்கு த்தியில் வாழ்கின்றனர்.

இவர்களை சிறைபிலிட பிரசித்தமான பயங்கரவாத தடை சட்டமும், அவசர கால ட்டமும் உபயோகிக் கப்பட்டுள்ளது. சிலருக்கு, தமிழ் விடுதலை இயக்கத்துடன் சம்பந்தம் உள்ளதாக குற்றம் சாட்டப்பட்டும். மற்றவர்கள் குற்றச் சாட்டு எதுவும் இன்றி ''சந்தேகத்தின்'' பேரில் சிறை வைக்கப் ட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு உள்ளனர்.

யூ. என், பி. அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து உள்ள இப்பாரிய ஒடுக்குமுறையானது சகல தொழிலாள — ஒடுக்கப்பட்ட மக்களை இராணுவ — பொலஸ் ஒடுக்குமுறைக்குள்ளாக்கும் திட்டத்தின் ஒரு அம்சமாகும். இது இந்திய பிற்போக்கு காங்கிரஸ் ஆட்சியாளர்கள் 150,000 துருப்புக்கள் மூலம் தமிழ் ஈழத்தை ஆக்கிரமித்தலுடனும்' யூ. என். பி. அரசாங்கம் மற்றைய பகுதிகளில் கொலைகார படைகளின் ஊடாக முன்னெடுத்துச் செல்லும் ஒடுக்குமுறையுடனும் நேரடியாக இணைந்துள்ளது

தமிழ் விடுதலை போராளிகளின் தாக்குதலின் முன் தடுமாறி வீழ்ந்துள்ள சிறீலங்கா முதலாளித்துவ ஆட்சியாளர்கள், தற்போதைய உலக நெருக்கடியின் மத்தியில் தவிர்க்க முடியாத படி தொழிலாள வர்க்கம் கிளர்ந்து எழுவது சம்பந்தமாக பீதி அடைந்துள்ளனர். அம்முறையான வர்க்க எழுசியின் பலம் வாய்ந்த கேந்திரமாக திகழும் தோட்டத் தொழிலாளர் மத்தியில் இருக்கும் (பாராளிகளை முன் கூட்டியே வேட்டையாடவும், ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான பிரஜாவுரிமை இல்லாத தொழிலாளர்களை இந்தியாவின் பட்டினி முகாம்களுக்கு அனுப்பவும் நடவடிக்கைகள் இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் கிழ் யூ. என். பி. அரசாங்கம் உக்கிரப்படுத்தியும் உள்ளது இதனாலேயே ஆகும்.



கைது செய்யப்பட்ட தோட்ட இளைஞர்கள்

இலங்கை தொழிலாள வர்க்த்தின் முதுகெலும்பாகிய தோட்ட தொழிலாளர் சம்பந்தமாக நாற்றமெடுத்துள்ள இந்நாட்டு வர்க்கம் நிரந்தரமாக கூட்டும் பீதியை 1948 ல் சுதந்திர அரசு என்பதை நிலைநாட்டியவுடன் அத்தொழிலாளரின் பிரஜாவுரிமையை ரத்து செய்ததன் மூலம் வெளிக்காட்டியது.

அன்று தொழிலாள வர்க்கத்தின் அபிவிருத்தியடைந்த பகுதியும், அதன் முன்னணியான போல்ஷிவிக் லெனினிஸ்ட கட்சியும், சேனநாயக்க — பண்டாரநாயக்க — ஜயவர்தன — பொன்னம்பலம் கும்பலால் கட்டவிழ்க்கப்பட்ட இப்பிற்போக்கு தாக்குதலானது . சகல தொழிலாளர் — ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான தாக்குதலின் ஆரம்பம் என சரியாக கண்டு அதற்கு எதிர்ப்பு காட்டியது. 1948 ம் ஆண்டில் ஏகாதிபத்தியவாதிகளுடன் சூழ்ச்சி செய்து நாட்டப்பட்ட முதலாளித்துவ அரசை கவிழ்த்து தொழிலாள வர்க்கத்தை ஆட்சியதிகாரத்திற்கு இட்டுச் செல்லும் போராட்டத்தின் ஓர் அடியாக இவ்வெதிர்ப்பு விளங்கியது.

சமசமாஜ — ஸ்டாலினிச நவசமசமாஜ தலைமைகள் இன்று இந்த தொழிலாள வர்க்க கொள்கைக்கு முற்று முழுதாக எதிராக விளங்குகின்றனர்கள். இன்று அவர்கள் தோட்ட தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கு

★ 2 ம் பக்கம் பார்க்கவும்



## 'கம்கறு மாவத்த' 'தொழிலாளர் பாதை' பத்திரிகைகள் அபிவிருத்தி அடைகின்றன

ஜூன் மாதத்தில் இருந்து ''கம்கறு மாவத்த'' பத்திரிகை 12 பக்கங்களுடன் வெளியாகுகின்றது. அதன் சகோதர பத்திரிகையான ''தொழிலாளர் பாதை'' பத்திரிகையை 12 பக்கங்களுடன் கூடிய விரைவில் வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளோம் இவ்வபிவிருத்திகளானது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் சகல விதமான வர்க்க சமரசவாதிகளுக்கும், திரிபுவாதிகளுக்கும் எதிராக தொழிலாள வர்க்க புரட்சிகர தலைமையை கட்டியெழுப்ப முன்னெடுத்துச் செல்லும் திடசங்கற்பமான போராட்டத்தின் வெற்றிகளே.

இம்முன்னேற்றமானது உலக சோசலிச புரட்சிக் கட்சியை கட்டியெழுப்புவதற்காக தொழிலாளர்கள். இளைஞர்களை கட்சியில் சேர்த்து அவர்களை புரட்சிகர மார்க்சிஸ்டுகளாக பயிற்றுவிக்க முன்னெடுத்துச் செல்லும் போராட்டத்துடன் இணைந்துள்ளது.

ஏகாதிபத்தியவாதத்தின் நெருக்கடி உலக ரீதியான

★ 8 பக்கம் பார்க்கவும்

## வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!

# தோட்டத் தொழிலாள இளைஞரை .

[முன் பக்கத் தொடர்ச்சி]

[illegible] ''இந்நாட்டின் பொருளாதாரத்திற்கும், ஜனத்தொ[illegible]கும் தாங்க முடியாத [illegible]மாகும்'' என வெளிப்[illegible]யாக குரலிட்ட சிறீல[illegible] மக்கள் கட்சியின் பிற்போக்கு முதலாளிகளுடனும் கொலைகார இந்திய — இலங்கை ஒப்பந்தத்துடனும் ஒன்று சேர்ந்துள்ளனர்.

இத்துரோக தலைமைகள் 1964 ம் ஆண்டில் கேவலமான இனவாத சிறீலங்கா சுதந்திர கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து தோட்ட தொழிலாளர்களுக்கு எதிரான சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தை அங்கீகரித்து தொழிலாளரை காட்டிக் கொடுத்ததன் அடிப்படையில் தொழிலாளர் மத்தியில் தனது அதிகாரத்தை வளர்த்துக் கொண்ட எஸ். தொண்டமான் இன்று யூ. என். பி. அமைச்சர் என்ற முறையில் இத்தொழிலாளருக்கு எதிராக வாளை ஏந்தியுள்ளார்.

ஒரு வருடத்திற்கு முன் தலவாகெலையின் நகர் மத்தியில் காலில் சுட்டு கைது செய்யப்பட்ட குமார் எனும் தொழிலாள இளைஞன் சம்பந்தமாக தலையிட கோரி தொண்டமானை சந்தித்த அவரின் தந்தைக்கு தொண்டமான் பின்வருமாறு கூறினார்: ''நீ உன் பிள்ளையை நன்றாக வளர்த்திருந்தால் அவனுக்கு இந்த கதி நேருமா?'' ஏகாதிபத்தியத்தின் ஒரு அடிவருடியின் சரியான பதிலாகும்.

தொண்டமான் முதலாளித்துவ அரசிற்கும் அதன் மூர்க்கமான ஒடுக்குதலுக்கும் சேவை செய்வது வார்த்தையால் மட்டுமல்ல. கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களை சந்தித்து பேசிய ''தொழிலாளர் பாதை'' நிருபர்களுக்கு அவர்கள் கூறியது என்னவென்றால் தொண்டமானின் ஆணையின் படி இ. தொ. கா. வாகனங்களிலும் அதிகாரிகள் இவ்விளைஞர்களை பிடித்து பொலிஸில் ஒப்படைத்தார்கள் என்பதேயாகும்.

உலக பொருளாதார நெருக்கடியின் பளுவை தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் மேல் திணிக்கும் முகமாக யூ. என். பி. அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் அழிவு வேலைத்திட்டத்தின் முக்கிய அம்சமாக தோட்ட தொழில்களை நாசப்படுத்துவதும் தோட்டத் தொழிலாளரை நாட்டிலிருந்து வெளியேற்றுவதும் விளங்குகிறது. இ. தொ. கா. தலைமைகள் அரசாங்கத்துடன் சேர்ந்து இக்கொலைகார திட்டங்களுக்கு உதவி வழங்குகின்றனர்.

இத்துரோகத் தன்மைக்கு எதிராக தோட்ட புறங்களில் ஆத்திரம் மூட்டும் எதிர்ப்புக்கள் படரத் தொடங்கியுள்ளன. சிறையிலிடப்பட்ட இளைஞர்களின் பெற்றோர்கள் 3000 பேர்கள் தலவாகெலையில், அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் பூண்டனர். தோட்டப் பகுதிகளில் வெவ்வேறு இடங்களில் கைது செய்தல்களுக்கு எதிராகவும் ரசபடைகளின் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் நிரந்தரமாக போராட்டங்கள் படருகின்றன.

இப்போராட்டங்களை தனிமைப்படுத்தவோ அல்லது சிதறடிக்கவோ முடியாது. இப்போராட்டங்கள் தொழிலாள வர்க்கம் போராடி தீர்க்க வேண்டிய பிரச்சினைகளையே பிரதிபலிக்கின்றது. இப்போராட்டங்களுக்கு ஒற்றுமையுடன் முகம் கொடுக்காவிடின் முதலாளித்துவ அரச படைகளின் வேட்டையாடுதல் தோட்டப் பகுதி இளைஞர்களுடன் முடிவு காணாது. இதுவானது சகல தொழிலாளர்கள் சம்பந்தமான பிரச்சினையாக உள்ளதென நாம் அழுத்திச் சொல்வது இதனாலேயே.

இ. தொ. கா. வின் தொண்டமான் — செல்லசாமி தலைமைகளின் காட்டிக் கொடுத்தலின் கோர தனத்தை உபயோகிக்கும் ஸ்டாலினிஸ்டுகள் செங்கொடி சங்கத்தின் ஊடாக தொழிலாளரை மக்கள் முன்னணியில் இணைக்க ஒரு பக்கம் வேலை செய்வதோடு மற்றைய புறத்தில் மத்தியவாதிகளும் குட்டி முதலாளித்துவ இயக்கங்களும் தோட்டப் புறத்தை ஊடுருவ தொடங்கி உள்ளது. இந்திய முதலாளித்துவத்தின் வால் பிடிகளாக மாறி விடுதலை போராட்டத்தை காட்டிக் கொடுத்த ஈரோஸ், ஈ. பி. ஆர். எல் எப்., டெலோ, புளொட் ஆகிய இயக்கங்கள் இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு உள்ளதோடு போலியான சிநேகிதத்துடன் தோட்டத் தொழிலாளரை அணுகுகின்றனர்.

அத்தோடு இ. தொ. கா யூ. என். பி. யுடன் இணைந்துள்ளதை அனுமதித்திருப்பதோடு ''போராளிகளாக'' தம்மை மாற்றி காட்டுவதற்காக தலவாகெலை இ. தொ. கா. தலைவர் பீ சந்திரசேகரம் போன்றவர்கள் முன் வந்துள்ளனர். தம்முடைய பிடியை தொழிலாளர்களின் மேல் வைத்திருக்க இவ்வகையான ''பாராளிகளும்'' மத்தியவாதிகளும் தனக்கு தேவை என்பதை தொண்டமான் நன்றாக உணர்ந்துள்ளார். ஜனவரி 3ம் திகதி நடத்தப்பட இருந்த வேலை நிறுத்தத்தை தொண்டமான் ரத்து செய்ததை எதிர்த்த 3 இ. தொ. கா. பிராந்திய தலைவர்கள் உட்பட 9 தொழிலாளர்களை உடனடியாக சங்கத்தில் இருந்து நீக்கிய தொண்டமான் ''உண்ணாவிரத வீரராக'' இருக்கும் சந்திரசேகரன் போன்றவர்களை தம்முடைய துரோக தனத்தை மூடி மறைக்க உபயோகிக்கின்றார்.

தோட்ட பகுதி இளம் தொழிலாளரை பொலிசாருக்கு பிடித்துக் கொடுப்பதற்கு எதிராகவும், தொழிலாள போராளிகளை இ. தொ. கா. வில் இருந்து நீக்குவதற்கு எதிராகவும் போராடுவதற்கு இ. தொ. கா. அங்கத்தவர்கள் உடனடியாக முன்வர வேண்டும்.

பொலிஸ் ஒடுக்கு முறைக்கு எதிராகவும், பிரஜாவுரிமையை வென்றெடுக்கவும் தோட்டத் தொழிலாளர்கள் முன்னெடுக்கும் போராட்டம் ஏகாதிபத்திய கைப்பொம்மைகளான இந்திய உபகண்ட ஆட்சியாளரின் ஆட்சி அமைப்புக்கே சவாலாகும். இப்போராட்டத்திற்காக சகல தொழிலாளரையும் அணிதிரட்டுவது மிகவும் முக்கியமானது இதனாலேயே. இனவாதத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை பிரிக்க பிற்போக்கு ஆட்சியாளர் திரட்டும் திட்டங்களுக்கு எதிராக இந்திய உபகண்டத்தின் சகல தொழிலாளரின் வர்க்க ஒற்றுமையை ஸ்தாபிக்க வேண்டும். தற்கால உலக பொருளாதார நெருக்கடியின் தீவிரமடைதலுடன், சகல நாடுகளினதும் பிற்போக்கு ஆட்சியாளர்கள் திரிபுவாதிகளினதும், ஸ்டாலினிஸ்டுக்களினதும் உதவியோடு ஒவ்வொரு நாடுகளின் தொழிலாளர்களை மற்றைய நாடுகளின் தொழிலாளர்களுக்கு எதிராக தூண்டவும், ஒரே நாட்டிலுள்ள தொழிலாளரை இனவாத ரீதியில் மோதவைக்கவும் நனவு பூர்வமாக இயங்கி வருகின்றனர். தற்போதும் அமெரிக்க, பித்தானிய, பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலிய ஆட்சியாளர்கள் தத்தமது நாடுகளில் வேலை செய்து வரும் குடி புகுந்த தொழிலாளர்களுக்கு எதிராக சட்டங்களை கொணர்ந்து இக்கொலைகார கொள்கைகளை நடைமுறை படுத்துகின்றார்கள். பிலிப்பின் பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும் மத பேதங்களையும் இனவாதத்தையும் தூண்டி விடும் சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தியாவின் எல்லா பிராந்தியங்களிலும் முதலாளிகள் இம்முறையான பிற்போக்கு திட்டங்களை நடைமுறை படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இப்பிளவு படுத்தலுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின் உலக ஒற்றுமைக்கான போராட்டத்தை முன்னெடுக்க கூடியது தொழிலாள வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் உலக சோசலிச புரட்சிக்காக போராடும் தலைமைக்கு மாத்திரமே.

சமசமாஜ — ஸ்டாலினிச இ. தொ. கா. — நவசமசமாஜ தலைமைகளினதும் மத்தியவாதிகளினதும் தேசியவாத இனவாத கொள்கைகள் தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவத்தில் இணைத்து கசாப்பு படைக்கு தள்ளிச் செல்லும் கொள்கைகளே. தொழிலாள வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்க ஒற்றுமையையும் சுயாதீனத்தையும் பேணி தொழிலாள வர்க்க ஆட்சி அதிகாரத்திற்காக போராடுவதன் மூலம் மட்டுமே தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இதற்கு எதிராக, பிற்போக்கு தேசியவாதத்தில் தொழிலாளரை இறுக வைத்து எதிர்ப்புரட்சிக்கு கதவை திறக்க இயங்கும் மக்கள் முன்னணியில் குந்தியிருக்கும் சகல தலைமைகளையும் அனைத்துலக புரட்சிகர தலைமையின் ஊடாக மாற்றுவது தொழிலாள வர்க்கத்தின் வெற்றிக்காக இன்றியமையாதது. இப்புரட்சிகர தலைமையை கட்டியெழுப்புவதற்காக போராடுவது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் மாத்திரமே.

தொண்டமான் தலைமைக்கு யூ என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமாறும், சமசமாஜ, கம்யூனிஸ்ட் தலைமைகளை பிற்போக்கு மக்கள் முன்னணியில் இருந்து வெளியேறுமாறும் வற்புறுத்தி வர்க்க சுயாதீனத்தின் பதாகையின் கீழ் நகர்புற தொழிலாளரையும், தோட்ட தொழிலாளரையும் ஒன்றிணைத்து அணி திரட்ட சகல போராளிகளும் முன்வர வேண்டும். அத்தோடு இந்தியாவினுள் சீ. பீ. ஐ., சீ பீ. ஐ எம். ஸ்டாலினிச தலைமைகளும் இந்திய — இலங்கை ஒப்பந்தத்திற்கு இந்திய இராணுவ ஆக்கிரமிப்பிற்கும் அளிக்கும் ஆதரவை உடனடியாக நிறுத்துமாறு வற்புறுத்தும் பிரச்சாரத்தின் ஊடாக இலங்கையிலும், தமிழ் ஈழத்திலும், இந்தியாவிலும் கோடிக்கணக்கான தொழிலாளரை, இரு நாடுகளின் ஏகாதிபத்திய கையாளான முதலாளித்துவ அரசாங்கங்களை விரட்டுவதற்காக சோசலிச வேலைத்திட்டத்திற்கான இந்திய உபகண்ட சோசலிச குடியரசை கட்டியெழுப்புவதற்காக அணி திரட்ட வேண்டும். இந்தியாவினுள் சோசலிச தொழிலாளர் கழகம், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் இணைந்து ஆசிய உபகண்டத்தினுள் இதற்காக போராடுகின்றது. இப்போராட்டத்தில் இணையுமாறு சகல போராளிகளையும் வேண்டுகின்றோம்.

- ★ தோட்ட பகுதி தொழிலாள இளைஞர்களை சிறையில் இருந்து விடுதலை செய்ய போராடு!
- ★ தோட்ட தொழிலாளரின் பிரஜாவுரிமையை பேணு!
- ★ தொழிலாளரை இந்தியாவின் பட்டினி முகாம்களுக்கு கடத்துவதற்கு எதிராக போராடு
- ★ சகல தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக ஆயத்தப்படுத்தும் இந்திய — இலங்கை இராணுவ சர்வாதிகாரத்தை முறியடிக்கும் வேலைத்திட்டத்தை அங்கீகரிக்க சகல தொழிற் சங்கங்களின் மகாநாடொன்றை கூட்டு!
- ★ சமசமாஜ — கம்யூனிஸ்ட — இ. தொ. கா. தலைமைகள் முதலாளித்துவ யூ. என். பி. சிறீலங்கா, மக்கள் கட்சிகளுடன் நடாத்தும் மக்கள் முன்னணிகளை தகர்த்தெறிய வற்புறுத்து!
- ★ யூ. என். பி. யை விரட்டி சகல தோட்டங்களும் முதலாளித்துவ சொத்துடமைகளும் நஷ்டஈடு வழங்காமல் தொழிலாளர் குழுக்களின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத்திட்டத்துக்கு போராடும் தொழிலாளர் — விவசாய அரசாங்கத்திற்காக போராடு!
- ★ முதலாளித்துவ — பொலிஸ் — இராணுவம் — சிறைச்சாலைகளை [illegible]லை!
- ★ தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை பேணி சிறீலங்கா — தமிழ் ஈழம் சோசலிச குடியரசுக்காக முன்னேறு!
- ★ சோசலிச புரட்சியின் உலக கட்சியாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவை கட்டியெழுப்பு!
- ★ புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தையும் இந்திய சோசலிச தொழிலாளர் கழகத்தையும் கட்டியெழுப்பு!

# சன்டினிஸ்டா அரசு வேலைநிறுத்தக்காரருட பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்ட

சன்டினிஸ்டா அரசாங்கமானது, கடந்த பெப்ரவரியில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட அடக்குமுறை கொள்கைகளுக்கு சவாலிட்ட வண்ணம் இரு மாதகாலமாக வேலைநிறுத்தம் செய்து வரும் நிகரகுவா ஆட்டோ மெக்கானிக், கட்டிடத் தொழிலாளர் 5000 பேரினை பிரதிநிதித்துவம் செய்யும் தொழிற்சங்கத் தலைமைகளுடனான பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டுள்ளது.

ஏப்ரல் மாத ஆரம்பத்தில் 35 வேலைநிறுத்த தொழிலாளரினால் தொடுக்கப்பட்ட பட்டினிப் போராட்டத்திற்கே அரசாங்கம் இத்தகைய பதிலை வழங்கி உள்ளது.

பிரதி தொழில் அமைச்சர் ரெனி விலிஜோஸ், தொழிலாளர் அனைவரும் தமது கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படும் முன் வேலைக்கு திரும்ப வேண்டுமென கட்டளையிட்டு உள்ளதுடன் வெளிநடப்பினையும் மறுத்துள்ளார். வெளிநடப்பானது நாட்டின் பொருளாதார 'மீட்சிக்கு' மிரட்டல் விடுத்துள்ளதாக அவர் கூறுகின்றார்.

இம்மீட்சி 'கருதுகோள், தேசிய முதலாளிகளுக்கு பரந்த சலுகைகளை வழங்கும் அதே வேளையில் வர்கக போராட்டத்தை ஒடுக்கும் முகமாக நிகரகுவாவின் முதலாளித்துவ தனியார் சொத்துடமையை பேணிக் காப்பதில் ஈடுபட்டுள்ள ஆளும் சன்டினிஸ்ய தேசிய விடுதலை முன்னணியின் குட்டி முதலாளித்துவ தேசிய கொள்கையால் தீர்மானிக்கப்பட்டதாகும்,

தொழிலாளர்கள் சம்பளத்தில் குறிப்பிட்ட அளவு உயர்வை தராத, விலைவாசி உயர்வுக்கு தூண்டிய பொருளாதார சரிப்படுத்தல் திட்டத்தினையும் நாணய மதிப்பிறக்கத்தையும் சன்டினிஸ்டா ஆட்சி அமுலாக்கியதன் பின் 200% சம்பள உயர்வு கோரிக்கையை விடுத்துள்ளனர். மேலதிகமான கட்டுப்பாட்டு திட்டங்கள், இவ்வாண்டில் 30 000 அரசாங்க ஊழியரை வெளியேற்றுவதற்கான நிலைமையை உள்ளடக்கியுள்ளன.

இந்த வெளிநடப்புக்கு பதிலாக, சன்டினிஸ்டா அரசாங்கமானது பாரிய சூடுகளை நடத்தியு[illegible] தொழிற்சங்க தலைமை[illegible] இராணுவ சேவை[illegible] [illegible]டுத்தியும் தொழிற்சங்க மண்[illegible]களில் குண்டர் தாக்குதல்களை மேற்கொள்ள ஒழுங்கு செய்தும் பல வழிகளிலும் வேலைநிறுத்த முறிப்பு எதிர் — பிரச்சாரத்தை தொடுத்தது. மட்டகல்பா மாகாணத்தி மார்ச் 8ம் திகதி இரு தொழிற்சங்க அமைப்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கட்டடத் தொழிலாளர் தொழிற் சங்கத்தின் தலைவர் ஒருவரான ரொடல் வோ வெலாஸ்குவாஸ் என்பவர் ''தொழிலாளரது நலன்களை பிரதிநிதித்துவம் செய்யும் புரட்சிகர அரசாங்கம் எனப்பட்ட ஒன்று, தொழிலாள வர்க்கத்தின் பிரச்சினையை கவனிக்காதுள்ளது முற்றிலும் முரண்பாடானதாகும்'' என கூறினர்.

''அரசாங்கமானது பட்டினிச் சம்பளங்களை எம்மை பெறச் செய்யவும் தொழிலாளர் நலன்களை அது பிரதிநிதித்துவ படுத்தவில்லை என உலகிற்கு எடுத்துக் காட்டவும் விரும்புகின்றது. ஆனல் அது புதிய சன்டினிஸ்டா முதலாளித்துவ வர்க்கத்தையே பிரதிநிதித்துவம் செய்கின்றது.''

வேலைநிறுத்த தொழிலாளருடன் சன்டினிஸ்டா அரசாங்கம் மோதுவதால் உருவான நெருக்கடியானது, அமெரிக்க ஆதரவுடனான கொன்ரா கூலிப் படையை திருப்பி அழைக்கும் சமாதான முடிவுக்கான திட்டங்களை கொண்டு வருவதற்கு பாதகமாயுள்ளது. தேசிய பேச்சுவார்த்தை எனப்பட்டதில் (அரசாங்கத்துடனன) ஈடுபட்டிருந்த எதிர் கட்சிகள் தொழிற சங்கங்களுடனன பேச்சுவார்த்தையை நிறுதியதற்கு எதிராக பேச்சுவார்த்தையில் இருந்தும் வெளியேறியுள்ளனர்.

மார்ச் 23 கொன்ரா — சன்டினிஸ்டா உடன்பாடு என சாபோவா எல்லையில் கைச்சாத்திட்ட உடன்படிக்கை முடிவுகளின் கீழ் சன்டினிஸ்டா கொன்ட்ரா தலைமைகளை இத்தகைய பேச்சுவார்த்தையில் இணைந்த படி அவர்களை ஓர் சட்டபூர்வமான அரசியல் சக்தியாக அங்கீகரித்து நாசகாரி கூலிப் படையின் உடன்படிக்கையில் இடம்பெறும் விதிகளொன்றை ஏற்றுள்ளது

வலதுசாரி எதிர் கட்சிகள் தமது சுய பிற்போக்கு நோக்கங்களுக்காக இந்த மோதுதலை உபயோகித்துள்ள அதேவேளை சன்டினிஸ்டா நிகரகுவா சோசலிச கட்சி (பீ எஸ். என்.) என்ற சில வேலைநிறுத்த தொழிற் சங்கங்களின் தலைமையை பெற்றுள்ள கட்சி கொன்ட்ராசின் முதலாளித்துவ அனுதாபிகளது 'ஜனநாயக' அம் சங்களுக்கு தன்னை கட்டுப்படுத்திக் கொண்டுள்ளது.

ஜனதிபதி டானியல் ஒட்டேகாவும் ஏனைய சன்டினிஸ்டா தலைமைகளும் வேலைநிறுத்த இயக்கத்தை எதிர்ப்புரட்சிகரமானது என்றும் தொழிலாளரை முதலாளித்துவத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் அடிவருடிகள் என்றும்'' கூறி வேலைநிறுத்த இயக்கத்தை தாக்கும் நோக்கில் ஸ்டாலினிஸ்டுகளது வர்க்க ஒத்துழைப்பு கொள்கை பயன்படுத்தியுள்ளது.

## மண்டியிடல்

நிகரகுவாவின் வர்க்க போராட்டமும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எண்ணற்ற தாக்கங்களும் சன்டினிஸ்டாசகளை திடமாக வலது சாரிப் பக்கம் தள்ளி விட்டுள்ளது. நிகரகுவா தொழிலாளருக்கு சட்டம் விதிக்கும் அதே வேளையில் இந்த ஆட்சியானது கொன்ட்ரா தலைமைத்துவத்திலுள்ள கூலி ஏஜந்துகளுக்கும் ஏகாதிபத்திற்குதியம் முன் அடிபணிந்துள்ளது.

ஏப்ரலில் உத்தியோகபூர்வமான ''பரிகேடா'' பத்திரிகைக்கு வழங்கிய அறிக்கையில் ஜனதிபதி ஒட்டேகா நிகரகுவாவிற்கு எதிரான மூன்றுண்டுக்கால அமெரிக்க பொருளாதார தடைக்கு முற்றுப் புள்ளியிடுமாறும் றீகன் அப்படி செய்யாவிடில் எதிர்ப்புரட்சிகர நிறுவனங்களுக்கு நிகரகுவாவினுள் அமெரிக்க நிதியிடலை தடுப்பதான பயமுறுத்தும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

''பொருளாதார தடை புதுப்பிக்கபடுமாயின் அது அவரது சகாக்களையும் கூட பாதிக்கும் ஏனெனில் நாம் றீகனை அரசியல் கட்சிசளுக்கும் லா பிரஸ்சா பத்திரிகைக்கும் ஏனைய தனியார் முதலாளிகளுக்கும் ஏனைய குழுக்களுக்கும் எந்தவித வளங்களை ''ம் வழங்க அனிமதியோம்'' என ஒட்டேகா பிரகடனம் செய்தார். ''ஒன்றில் சகலருக்கும் எதிராக ஒரு தடை இருக்க வேண்டும் அல்லது ஒருவருக்கும் எதிராக இருக்கலாகாது.''

ஒட்டேகாவின் ''பயமுறுத்தலானது'' சன்டினிஸ்டா குட்டி முதலாளித்துவ தேசியவாதத்தின் வங்குரோத்தினை தெளிவாக விளக்கி காட்டுகின்றது. அவர் என்ன கூறுகிறுரெனில் நிகரகுவாவுடன் 'சாதாரண வர்த்தக தொடர்பை' மீள ஆட்படுத்தல் உதாரணமாக மத்திய அமெரிக்காவின் ஏனைய பாகங்களில் நிலவும் ஏகாதிபத்திய சரண்டல் ஆதிக்கம் தொடர்புகளை திரும்ப கொண்டு வருவதற்கு அவர் சீ. ஐ. ஏ. க்கும் ஏனைய அமெரிக்க ஏஜந்துகளுக்கும் எதிர்ப் புரட்சிகர கட்சிகள், பத்திரிகைகள் நாட்டினுள் உள்ள ஏனைய நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்ய அனுமதிக்க விரும்புகின்ருர் என்பதே.

ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்படும் நாடுகளது சுயநிர்ணயத்தையும் தேசிய ஆதிக்கத்தையும் பேண குட்டி முதலாளித்துவம் இலாயக்கற்றது என்பது இதிலும் பார்க்க தெளிவாக வெளியிடப்படுமா — லத்தீன் அமெரிக்காவில் முதலாளித்துவ கொன்சவேட்டிச ஆட்சியின் கீழான லத்தீன் அமெரிக்கா நாடுகளிலும் கூட, சில கட்சிகளும் பத்திரிகைகளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் நிதியிடப்படும் செய்தி தேசிய எழுச்சிகளை தூண்டி அரசியல் அவதூறுகளை பரப்புகின்றது. எனினும் ஒட்டேகா இத்தகைய நிதியிடலை அமெரிக்க முதலீட்டுடனன ஓர் வர்த்தக தொடர்பின் அங்கமாக்கி நாட்டை வசனத்துக்கு நேரான படி, சோரம் போதலுக்கு இடமளிக்க விரும்புகின்ருர்.

அதே சமயத்தில் சன்டினிஸ்டா தலைமைத்துவமானது இடையருது சீ. ஐ. ஏ — தயாரிப்பான கொன்ட்ரா நாசகார படை தலைமைக்குள் உள்ள ''பிளவு'' களின் தனது கவனத்தை வெளிப்படுத்தியவாறு உள்ளது. 'பரிகேடா' வுக்கு அளித்த அறிக்கையில் ஒட்டேகா ''அவர்கள் (கொன்ட்ரா) உள்ளூர தம்மிடையே தாக்கல் மேற்கொண்டு உள்ளனர்; பிரிவுகள் சாபோவாவின் உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களுக்கும் உடன்படிக்கையை அழிக்க விருமபிய என்ரிக் பெர்மூடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயானது போன்றதென குறிப்பிட்டுள்ளார்.''

## வலுப் போராட்டம்

கொன்ட்ராசின் விஸ்தரிப்பின்படி இராணுவ கட்டளை அதிகாரி முன்னை நாள் கேர்ணலான சமோசா சர்வாதிகார தேசிய காவலாளி பெல்மூடாசும் சீ ஐ ஏ. யின் நீண்டகால ஏஜநத[illegible]க நிகரகுவாவில் [illegible] தற்போது கொன்ட[illegible] முக்கிய சிவிலியன் த[illegible] ரான கால்ரோவுக்கும் இடையிலான பிளவு நாசகாரி படையினுள் வலுவுக்கான போராட்டமாக அமைகிறது. 1985 ல் குடியரசு கட்சி வெற்றிக்கான தேர்தல் விளைவால் பயங்கர போருக்கு அமெரிக்க புதுப்பிக்கப்பட்ட நிதியுதவியை மனங்கொண்ட அதே சமயம் சன்டினிஸ்டா ஆட்சியிடம் இருந்து மேலதிக சலுகை பெற சமாதான பேச்சுவார்த்தையை தொடரும் நிலைப்பாட்டை தாம் கொண்டுள்ளாரென கால்-ரா தெரிவிக்கின்ருர்.

சீ. ஐ. ஏ. யின் நிதியீட்டலை கொள்ளை அடிப்பதில் ஈடுபட்டுள்ள இவர்களின் சண்டையை, சமாதானத்தை விரும்பும் — சமாதானத்தை வெறுக்கும் இரு பகுதிகளின் ஒரு யுத்தம் என ஒட்டேகாவால் எடுத்துக் காட்டி மக்களை குழப்பியடித்து கொன்ட்ராவுக்கு தரும் சலுகைகளை மூடி மறைப்பது, கலேரோவும் ஏனையவரும் நிகரகுவாவில் ஒரு சட்டரீதியான எதிர்ப்புரட்சி கட்சியை கட்டியெழுப்ப வழிவகுக்கும்.

மத்திய அமெரிக்காவில் தேசிய முதலாளித்துவ புரட்சியின் பணிகளை முன்னெடுத்து செல்வதற்கு குட்டி முதலாளித்துவ தேசியத்துக்கு இயலாதுள்ளதை அம்பலப்படுத்துவதாகவே சன்டினிஸ்டா ஆட்சியின் வளர்ச்சி உள்ளது சகலவற்றிற்கும் மேலாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் இருந்து உண்மையான தேசிய சுதந்திரத்தை வென்றெடுக்க முடியாதுள்ளது.

பாட்டாளிகளால் மட்டுமே தமது சுயசோசலிச திட்டங்களால் சுதந்திரமாக போராடி நிகரகுவாவின் முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்டி புரட்சியை மத்திய அமெரிக்கா பூராவும் பரப்பி இத்தகைய பணியை நிறைவேற்ற முடியும். சன்டினிஸ்டா ஆட்சிக்கும் நிகரகுவா தொழிலாள வர்க்கத்துக்கும் இடையிலான அதிகரித்து வரும் பிளவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனு அதன் நாசகார கைப்பொம்மைகளுக்கும் பகிரங்கமாக வரவழைப்பு விடுக்கும் சன்டினிஸ்டாவின் திருப்பமும், ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சி கோட்பாட்டினை அடிப்படையாக கொண்ட நிகரகுவா மத்திய அமெரிக்க தொழிலாள வர்க்க புரட்சிக் கட்சி ஒன்றை கட்டி எழுப்புவதற்கான அவசர தேவையையே உணர்த்துகின்றது

# ...ாழர் கீர்த்தி பாலசூரிய நினைவுக் குறிப்பு:

## தொழிற்சங்கங்களுள் புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்பும் போராட்டம்


— டபிள்யூ. ஏ. சுனில் —

...மசமாஜ — கம்யூனிச — இ. தொ. கா. தலைவர்களும் மற்றும் மத்தியவாத தலைவர்களும் தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவத்துடன் பிணைக்கவும், தேசியவாத சந்தர்ப்பவாதத்துக்கு அடிமைப் படுத்தவும் செய்த முயற்சிகளை எதிர்த்து தோழர். கீர்த்தி பாலசூரிய தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலகவாத ஐக்கியத்தையும் வர்க்க சுயாதீனத்தையும் தொழிற்சங்க இயக்கத்தால் கட்டி எழுப்பும் பொருட்டு நடாத்திய போராட்டம் பெரும முக்கியத்துவம் வகிக்கின்றது.

1964 ல் சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்களின் மாபெரும் காட்டிக் கொடுப்பு, தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனத்தினை முதலாளித்துக்கு அடிமைப் படுத்தியதோடு அது நகர்ப்புறம் தோட்டப்புற தொழிலாள வர்க்கத்தை கூறுபோடும் முதலாளித்துவ உபாயத்துக்கும் முண்டு கொடுத்தது. அத்துடன் இந்த அடிபணிவின் மூலம் கிராமப்புற விவசாயிகளுக்கும், வேலையற்ற இளைஞர்களுக்கும் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரத்தின் பேரிலான நம்பிக்கை உடைந்தது. அவர்கள் முதலாளித்துவத்தினதும், மக்கள் விடுதலை முன்னணி போன்ற குட்டி முதலாளித்துவ அமைப்புக்களுக்கும் பலியாகினர்.

தோழர். கீர்த்தி பாலசூரிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை முன் நிறுத்தி இக்காட்டிக் கொடுப்புக்கு எதிராக நடாத்திய போராட்டம், புரட்சிக் கட்சியைக் கட்டி எழுப்புவதாக விளங்கியது. தொழிற்சங்க இயக்கத்தினுள் இப்போராட்டம் மிகவும் தீர்க்கமானதாக விளங்கிற்று.

1972 ல் வங்கி ஊழியர்கள் சம்பளப் போராட்டத்தில் இறங்கினர். மூன்று மாதங்களுக்கு மேல் நீடித்த, இந்த வங்கி ஊழியர்களின் போராட்டத்தில், முதலாளித்துவக் கட்சிகளுடன் கூட்டரசாங்கத்தினுள் நுழையும் சமசமாஜ — கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகளின் கேடுகெட்ட காட்டிக் கொடுப்புக்கள் அம்பலமாகின. இப்போராட்டத்தில் வங்கி ஊழியர் போராட்டத்தை தாக்கும் பொருட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடியதோடு வங்கி ஊழியர் சங்கத்தின் மத்தியவாத தலைவர்களின் ஈடாட்டங்களையும், சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு எதிரான அரசியல் போராட்டத்துக்கு தடை போடும் இவர்களின் நடவடிக்கைகளையும் அது அம்பலப்படுத்திற்று.



தோழர். கீர்த்தி பாலசூரிய ஓர் பொதுக் கூட்டத்தில்! அவர் தொழிற்சங்க இயக்கத்தினுள் புரட்சிகர தலைமையை கட்டியெழுப்ப தீர்க்கமான போராடினார்.

இந்த அரசியல் போராட்டத்தை ஒழுங்கு செய்வது தொடர்பாகத் தோழர். கீர்த்தி தீவிர அக்கறை காட்டினார். தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்கள் கிளர்ச்சியடையப் பின்னணியாக விளங்கிய உலக வர்க்க நிலைமை, அது இலங்கை சம்பந்தமாக ஏற்படுத்தி உள்ள தாக்கம், தொழிற்சங்கத் தலைமைகளின் தொழிற்சங்கவாத வேலைத்திட்டங்களை ஆய்வு செய்து, அதன் அடிப்படையிலான அரசியல் போராட்டம், வேலைத்திட்டத்தை தொழிற் சங்கங்களுள் எடுத்துச் செல்ல கீர்த்தி போராடினார்.

வங்கி ஊழியர் சங்கத்தினுள்ளும், ஏனைய துறைகளுள்ளும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடாத்திய இந்த நீண்ட போராட்டத்தின் மூலம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினுள் சிறந்த வர்க்கப் போராளிகள் அணி திரண்டனர். இதனால் இக்காலப் பகுதியில் தொழிற் சங்கத் துறையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் ஆளுமையை உயர் மட்டத்துக்கு உயர்த்தியது.

புரட்சிக் கம்யூனிஸ்ட கழகத்தின் அரசியல் ஆளுமை தொழிலாள வர்க்கத்தினிள் பரவுவதையிட்டு சமசமாஜ — கம்யூனிச — இ. தொ. கா. தலைமைகளுக்கும் மற்றும் தம்பு போன்ற மத்தியவாதிகளுக்கும் இடையே அச்சம் பரவியது.

இதனால் முதலாளித்துவ அரசாங்கம் முதலாளித்துவ உடமையாளர்களின் சார்பில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக காரியாளர்களை வேட்டையாடும் அரச ஏஜன்டுகளாக சமசமாஜ — கம்யூனிச கட்சிகள் தொழிற்படுவது தற்செயலானது அல்ல.

1975 செப்டம்பரில் இத்துரோகத் தலைவர்களின் பக்க பலத்துடன் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை பயங்கரவாத இயக்கமாக பேர் சூட்ட பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா முன் வந்தார். இந்த முதலாளித்துவத் தலைவியின் முயற்சியையும் தொழிலாள வர்க்கத்தை அதனை எதிர்த்து அணி திரட்டியதன் மூலம் முளையிலேயே கிள்ளி எறிவதில் பு. க. க. வெற்றி கண்டது.

### அரச வேட்டை

இந்த அரச வேட்டை தோல்வி கண்டதைத் தொடர்ந்து பு. க. க. காரியாளர்களை வேட்டையாடும் முயற்சியால் முதலாளித்துவ அரசாங்கம் இடைவிடாது முயன்றது. இதன் நிச ஏஜன்டுகளாக தொழிற்பட்ட சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைமைகள், தமது தொழிற்சங்கங்களில் இருந்து பு. க. க. காரியாளர்களை விலக்கும் நானாவிதமான பொறிகளை பாவித்தனர்.

அத்தகைய வேட்டை இடம்பெறற ஒரு வேலைத்தளம் துல்கிரிய நெசவாலை. அங்கு பு. க. க காரியாளர்கள் வேட்டையாடப்பட்ட சமயம் தோழர். கீர்த்தியின் தலைமையில் பு. க. க நடாத்திய போராட்டம் மனதைக் கொள்ளைக் கொள்ளும் பெரும் அரசியல் போராட்டமாக விளங்கியது.

துல்கிரிய தொழிற்சாலையைச் சேர்ந்த சமசமாஜ தொழிற் சங்கத்துள் இருந்த பு. க. க. தோழர்களுக்கு எதிராகப் பொய் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி, ஒழுங்கு விசாரணைகள் மூலம் அவர்களை அதிலிருந்து வெளியேற்றும் உத்திகளில் பற்றி வீரக்கோன், பேர்சி விக்கிரமசேகர தலைமை ஈடுபட்டது. ஒழுங்கு விசாரணை கடிதங்களை துல்கிரிய கிளைச் சங்கத் தலைவர்களுடன் நடாத்திய சதி மூலம் ஒழித்து வைத்த இத்தலைவர்கள், ஒரு தலைப் பட்சமாக முடிவெடுத்தனர்.

அத்துடன் நின்றுவிடாத இத்துரோகிகள் 1976 அரசாங்க அச்சகப் போராட்டத்தினைச் சூழ அணி திரண்ட துல்கிரிய தொழிலாளர்களிடையே இருந்தே பு. க. க. காரியாளர்களை வேட்டையாட முயன்றனர். டபிள்யூ ஏ. சுனில், நந்தசிறி, ஹெட்டியாராச்சி, பொலிசாரினால் கைது செய்யப்பட்டு, பொய்க் குற்றச் சாட்டின் பேரில் ஒரு மாதம் 'றிமான்டில்' வைக்கப்பட்டனர். அத்தோடு இவர்கள் இருவருடன் கே. ஜீ. குணரத்ன, பீ. பி. கருணாசேன, சுகீஸ்பர திசாநாயக வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

இந்த வேட்டை நடைமுறைப் படுத்தபடுவதற்கு முதல் நாள் சமசமாஜ தொழிற் சங்கத் தலைவர் பேர்சி விக்கிரமசேகர, அச்சமயம் துல்கிரிய ஆலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராணுவப் பிரிவின் தலைவர், வரக்காபொலை பொலிஸ் நிலைய அதிபர், துல்கிரிய ஆலை நிர்வாகிகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தினார். இப்பேச்சுவார்த்தை அம்பேபுச வாடி வீட்டில் நடைபெற்றது. இதன் பின்னரே வேட்டை ஆரம்பமாகியது. அன்று கைத்தொழில், விஞ்ஞான அமைச்சரான ரீ. பி. சுபசிங்க இன்று ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்.

எனினும் இவர்களின் இந்த வேட்டை எமது திடசங்கற்பத்தை சிதறடிப்பதில் வெற்றி பெறவில்லை. தமது காரியாளர்கள் வேட்டையாடப்படுவதைக் கண்டதும் உடன் நடவடிக்கையில் இறங்கிய தோழர். கீர்த்தி பாலசூரியவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அந்த வேட்டையைத் தோற்கடிக்கவும், துல்கிரிய தொழிலாளர்களை திரும்பவும் சேவையில் அமர்த்தவும் தொழிலாள வர்க்கத்தினுள் போராட்டம் தொடுத்தது. முதலாளித்துவ கூட்டரசாங்கத்தை உடை! துல்கிரிய தொழிலாளர்களை மீண்டும் சேவையில் அமர்த்து! என்ற போராட்ட சுலோகத்துடன் தீவு பூராவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பிரச்சாரம் தொடுத்தது.

இப்பிரச்சார இயக்கம் எமக்கு வழங்கிய பயிற்சியும் படிப்பினையும் அளப்பரியன.

தொழிலாள வர்க்கத்தை தோற்கடிக்க மட்டுமன்றி போராட்டத்தில் தோல்விக் கண்ட தொழிலாளர்கள் முதலாளித்துவ நீதிமன்றம், நிர்வாகிகளின் எதிரில் வயிறு வளர்க்கும் நிலைமையை சிருஷ்டிக்கவும் சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்கள் செயற்பட்டனர் இந்நிலைமையில் தோழர். கீர்த்தி பாலசூரிய பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், விவசாயிகள், வேலையற்ற இளைஞர்கள், யுவதிகளை நடைமுறையில் ஐக்கியப்படுத்தும் வகையில் ...மையைச் செயல்பட வைத்தார்.

இப்போராட்டத்தினுள் நகர்ப்புற, தோட்டப் புறத் தொழிலாளர்கள், கிராமப் புற விவசாயிகள், தொழில் அற்ற இளைஞர்கள், வடமாகாண ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினருடன் ... எமது வேலைத்திட்டத்தினை கலந்துரையாடினோம். எமது பிரச்சாரத்தின் ...து நாம் சகல பகுதிகளிலும்

★ 7 ம் பக்கம் பார்க்கவும்

# 11 அம்சக் கோரிக்கை இயக்கம் நெருக்கடிக்குள்

இல காலமாக தொழிலாள வர்க்கத்தின் போராட்ட மத்தியஸ்தானம் என்று தன்னை காட்டிக் கொண்டிருந்த 11 அம்சக் கோரிக்கை இயக்கமானது இன்று பலத்த வறுபாடுகளை கொண்டதாக தகர்த்து உள்ளது. 11 அம்சக் கோரிக்கை இயக்கத்தின் ஒரு பிரிவான அ. வி. சே. சங்க தலைமைகள் முதலாளித்துவ சிறீலங்கா மக்கள் கட்சியை முன்னணியாக கொண்ட மக்கள் முன்னணியின் மேதின ஊர்வலத்தில் கலந்தனர். மற்றொரு குழுவான கைத்தொழில் போக்குவரத்து பொது தொழிலாளர் சங்க தலைமைகள் வேறாக மேதின ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் நடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். மேதினத்தன்று காலையில் அ. வி. சே. சங்கமும் இலங்கை ஆசிரியர் சங்கமும் ''ஐக்கிய சோசலிஸ்டுகள்'' என்ற பெயரில் வேறொரு மேதின கூட்டத்தை நடத்தினர். இதற்கு இடையில் 11 அம்சக் கோரிக்கை இயக்கத்தின் கோரிக்கைகள் குப்பைக் கூடைக்குள் தள்ளப்பட்டு புதிய ''கோரிக்கை'' சூத்திரத்தை பலப்படுத்தவும், வெட்டுகுத்து டத்தலும் ஆரம்பமாயுள்ளது

11 அம்சக் கோரிக்கை இயக்கத்தினதும் அதற்குள் இன்று எழுந்துள்ள புதிய நெருக்கடியினையும் ஆராய்ந்து கொள்வது, மத்தியவாதத்தின் தன்மையை அறிந்து கொள்ள தொழிலாள வர்க்கத்திற்கு கிடைத்துள்ள பெரும் படிப்பினையாகும். இப்படிப்பினை, முதலாளித்துவ அமைப்பினை புரட்டியடிக்கும் போராட்டத்தில் மத்தியவாதத்தை தோற்கடித்து புரட்சிகர தலைமைத்துவத்தை கட்டியெழுப்பும் பொறுப்பினை எதிர் கொண்டுள்ள தொழிலாள வர்க்கத்திற்கு இன்று அத்தியாவசியமாகும்.

அ. வி. சே. சங்கம் சிறீலங்கா தேசிய ஆசிரியர் சங்கம், ஐக்கிய தொழிலாளர் சங்கம், கைத்தொழிற் போக்குவரத்து பொதுத் தொழிலாளர் சங்கம் போன்ற சங்கங்கள் பலவற்றின் தலைமைகள் ஒன்றிணைந்து தொழிற் சங்க இயக்கத்திற்கு ''மாற்று மத்தியஸ்தானம் ஒன்றெனக் கூறிய வண்ணம் 11 அம்சக் கோரிக்கை இயக்கத்தை ஆரம்பித்தன.

ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியினதும் நவசமசமாஜ கட்சியினதும் சீ. எம். யூவின் தலைமைகளதும் சந்தர்ப்பவாத தொழிற்சங்க முன்னணிக்கும் சமசமாஜ தலைமைகளது தொழிற் சங்கங்களுக்கும் எதிராக தமது ''மாற்று மத்தியஸ்தானம்'' போராடுவதாக 11 அம்சக் கோரிக்கை இயக்க தலைமைகள் கூறினர்.

முன்னர் கூட்டரசாங்க வேலைத்திட்டங்களுக்குள் தொழிலாள வர்க்க இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, பின்னர் யூ. என். பி. யின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டு அடிபணிந்து தொழிலாள வர்க்கத்தை தயாரற்ற நிலைக்குள் வைத்தபடி 1980 ஜுலை வேலைநிறுத்தத் தை தோல்விக்குள் ஆழ்த்த லங்கா சசமாஜக் கட்சி — கம்யூனிச — நவசம மாஜக் கட்சி — சீ. எம். யூ தலைமைகள் செயற்பட்டன. விசேடமாக அரசாங்கதுறை தொழிலாளரை வேலை நீக்கி ஏற்படுத்தப்பட்ட இத்தோல்வியின் பின், லங்கா சமசமாஜக் கட்சி — கம்யூனிச — நவசமசமாஜ தலைமைகள் யூ. என். பி. அரசாங்கத்தின் முன் மேலும் மண்டியிட்டன. தொழிலாள வர்க்கத்தை முற்றாக தோற்கடித்து சர்வாதிகாரத்துவத்தை தொடுக்கும் தேவையே யூ. என். பி. அரசாங்கத்திடம் காணப்பட்டது. ஜுலை வேலைநிறுத்தத்தின் போது ''வேலைநிறுத்தக்காரரை சுடுகாட்டுக்கு அனுப்புவதாக லலித் அத்துலத்முதலி இறுமாப்புடன் கூறியது முதலாளித்துவத்தின் இக்கொடிய தேவையை வெளிப்படுத்திய படியேயாகும்.

எங்ஙனமாயினும் அத்தேவையை நிறைவேற்றி விட முடியாது இருந்தது. வடக்கு — கிழக்கு ஆயுத விடுதலைப் போராட்டம் எழுச்சியுற்றமை யூ. என். பி. அரசாங்கத்தையும். முதலாளித்துவத்தையும் ஆழமான நெருக்கடியில் தள்ளியுள்ளது;





ஜயவர்தன — காந்தி கூட்டுச் சதியான இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் பின்னால் மத்தியவாதிகள் ஓடுகின்றனர்.

அப்போது யூ. என். பி. உள்ளடங்களான சிங்கள முதலாளித்துவம் தமிழர் விரோத இனவாத யுத்தத்துடன் அடக்குமுறை நடவடிக்கைகளையும், இனவெறியையும் தூண்டி விடுவதனூடாக தொழிலாள வர்க்கத்தை கீழ்ப்படுத்தி விட முயற்சித்தது. தமிழ் விடுதலைப் போராட்டத்திற்கு எப்போதும் எதிராக உள்ள சமசமாஜ — கம்யூனிச தலைமைகள் யுத்தத்திற்கு வெறும் எதிர்ப்பை தெரிவித்தமை அது முதலாளித்துவ நெருக்கடியை தீவிரப்படுத்தி விடும் என்ற பீதியினாலேயேயாகும்.

தொழிலாள வர்க்கத்திற்கு, விசேடமாக அதன் அனுபவம் வாய்ந்த பிரிவினருக்கு யூ என். பி. அரசாங்கத்தன் தாக்குதலுக்கு எதிராக போராடவுள்ள தேவையை இத்தலைமைகள் உதைத்துத் தள்ளின. தாம் மாற்று தலைமைத்துவம் வழங்குவதாக தெரிவித்தவாறு 11 அம்ச இயக்கத் தலைமை முன் வந்தது இச்சந்தர்ப்பத்திலேயாம்.

தமிழ் தேசியத்தின் சுயநிர்ணய உரிமை, தோட்டத் தொழிலாளரது பிரஜாவுரிமை, அரசியல் கைதிகளுக்கு விடுதலை தோட்ட — தொழிற்சாலை — வங்கி தேசியமயமாக்கும் கோரிக்கைகளும் மொனராகலை விவசாயிகளிடமிருந்து பறித்த காணிகளை மீண்டும் வழங்குமாறு கோருவதும் இவ்வியக்கத்தினால் அன்று சமர்ப்பிக்கப்பட்டது. தாம் இனவாத யுத்தத்திற்கு எதிரானோர் என்றும் இவ்வியக்கம் தெரிவித்தது;

இன்று 11 அம்சக் கோரிக்கை இயக்க சகல தலைமைகளும் அன்று தமது இயக்கம் பிரதிநிதித்துவப்படுத்தி நின்ற சகல கோரிக்கைகளையும் காட்டிக் கொடுத்தடி ஒருவரை ஒருவர் மிஞ்சிவிடாது வலதுசாரி நடவடிக்கைகளை சமர்ப்பிக்கும் பொருட்டு முண்டியடிக்கின்றன.

அரச லிகிதர் சேவை சங்க குணசேன மகாநாம தலைமைத்துவமும் இலங்கை ஆசிரியர் சங்க எச். என். பெர்னாந்து தலைமைத்துவமும் இந்திய உபகண்டத்தில் ஏகாதிபத்தியத்தினதும் அதன் வால் பிடியரான முதலாளிகளதும் தேவைகளை பேணுவதற்காக பொறிந்த இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பகிரங்க ஆதரவாளராகும் பொருட்டு தமிழ் தேசிய இனத்தின் உரிமைகளை நிராகரிக்க பகிரங்கமாக முன்வந்துள்ளன.

இதற்கு முற்றிலும் எதிராக செல்லும் எனப்படும் 11 அம்சக் கோரிக்கை இயக்க கோரிக்கையை திருத்தியமைக்கும் பட்டியல் கைத்தொழில் போக்குவரத்து பொதுத் தொழிலாளர் சங்க தலைமைத்துவத்தால் [torn] பிக்கப்பட்டுள்ளது. முன்னைய கோரிக்கை[torn] குப்பைக் கூடையுள் [torn] கின்றது. இக்கோரிக்கை[torn]க்கு ஐக்கிய தொழில்[torn] சங்க தலைவர் டி. எஸ்[torn] லவாராச்சியது ஆதர[torn] கிட்டுவதாக தெரிவிக்கப்பட்டது. தமிழ் இனத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையை முற்றாக கைவிடும் இந்த பட்டியல் யூ. என். பி. அரசாங்கமுடன் பேச்சுவார்த்தையினால் அரசியல் தீர்வு எனப்படுவதை ஏற்படுத்துமாறு பழைய சீர்திருத்தவாத ஸ்டாலினிச இற்றுப்போன சூத்திரத்தை சமர்ப்பித்துள்ளன. இக்கோரிக்கை சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமைகளது கோரிக்கைக்கு பெரிதும் சமமானவை. தோட்டத தொழிலாளரது குடியுரிமைப் பற்றிய கோர்க்கையும குப்பை கூடையில் வீசப்பட்டது. குணசேன மகாநாமவும், எச். என். பெர்னாந்துவும் முதலாளித்துவத்திற்கு கீழ்ப்பட்டு சென்றதுடன் அன்ரனி மார்க்கஸ் — மலலவாராச்சி தலைமைகள் மறுபுறத்தில் முதலாளித்துவத்திற்கு கீழ்ப்படுதல் இக்கோரிக்கைகள் ஊடாக புலப்படுகின்றது.

மக்கள் விடுதலை முன்னணி தடை தொடர்பாகவும் இத்தொழிற்சங்க தலைமைகள் இடையே வேறுபாடு உருவாகி உள்ளது கைத்தொழில் போக்குவரத்து பொது தொழிலாளர் சங்க தலைமைத்துவத்தை போன்று இலங்கை ஆசிரியர் சங்க தலைமைகளும் மக்கள விடுதலை முன்னணி தடையை நீக்கும் பொருட்டு முன் நிற்க வேண்டுமென கூறுவதுடன் லிகிதர் சேவை சங்க தலைமைகள் அதற்கு இணங்கவில்லை என கூறப்பட்டது.

இவை சகலவற்றையும் கவனிக்கும் எந்தவொரு தொழிலாளியும் ஒன்றை நிச்சயம் காண்பார். அது யாதெனில் பல ஆண்டுகளுக்கு முன் தம்மால் பகிரங்கமாக கண்டிக்கப்பட்ட விமர்சனைக்குட்பட்ட வேலைத்திட்டங்கள் பலவற்றை பகிர்ந்து கொள்ள இன்று இக்கனவான்கள் வெட்டிக் குத்தி ஈடுபட்டுள்ளன என்பதேயாம். சமசமாஜ ஸ்டாலினிச இ. தொ. கா. நவசமசமாஜ தலைமைகளது ஒடுக்குதலில் இருந்து தொழிலாள வர்க்கத்தை விடுவிக்க புதிய. சிறந்த வழியை தேடி உள்ளதாக கூறிய கூப்பாடு இன்று முடிவுக்கு வந்து, அவர்கள் அத்தலைமைகளது வேலைத்திட்டங்களை தமது வேலைத்திட்டங்களாக ஏற்றுக் கொண்டன. முதலாளித்துவ மக்கள் கட்சின் முக்கிய மக்கள் முன்னணி அவர்களுக்கு தக்க ஆசனம் வழங்கியுள்ளது.

★ 7 ம் பக்கம் பார்க்கவும்


## ''தொழிலாளர் பாதை''
### சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:

| | |
|---|---|
| 1 மாதம் — ரூ. 4.00 | 3 மாதம் — ரூ. 12.00 |
| 6 மாதம் — ரூ. 24.00 | 1 வருடம் — ரூ. 48.00 |

பெயர் :..............................................

முகவரி :..............................................

சந்தாக் காலம் :.................. ரூ: ......... சதம் ......

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

நிர்வாகி,

''தொழிலாளர் பாதை''
இல. 90, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10.

# ரசின் முன் மண்டியிட்டு விடுதலையான ரு குட்டி முதலாளித்துவ கெரில்லா குழு

முதலாளித்துவ அரசை மண்டியிட்டு, தாம் குற்றவாளிகள் என்பதை ஒப்புக்கொண்டதன் மூலம் சிறையில் இருந்து விடுதலை பெற்ற ஓர் குட்டி முதலாளித்துவ கெரில்லா தலைவர் கும்பலை பற்றிய செய்தி பத்திரிகைகளில் தோன்றியது.

இந்த கேடுகெட்ட சரணடைதலை நடித்தவர்களுள் இந்திக்க குணவர்தன, ஜீ. டி. தஹநாயக்க, புல்சரா லியனகே உட்பட பலர் அடங்கினர். இவர்கள் எல்லோர் மத்தியிலும் காணக் கூடிய முக்கிய இலட்சணமானது ட்ரொட்ஸ்கிசத்துக்கான ஆழமான குரோதமும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு எதிராக உள்ள உக்கிர எதிர்ப்புமாகும். இவர்கள் எல்லோரும் ஸ்டாலினிசத்தினதும் கையாட்கள் என பிரசித்தமடைந்தவர்களே, வழக்கின் பிரதான குற்றவாளியாக கருதும் தயான் ஜயதிலக்க மறைந்து கொண்டுள்ளார். அவர் உட்பட மற்றைய மறைந்திருப்பவர்களுக்கு எதிராக யூ. என். பி. அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் என தெரியவருகின்றது.

அரசினை கவிழ்க்க ஓர் ஆயுதபாணி கெரில்லா இயக்கத்தை கட்டி எழுப்புதல், அதற்கு சதி செய்தல் என்பனவை இவர்களுக்கு எதிரான குற்றம் சாட்டுதல்களாகும் நாட்டில் பிரசித்தமடைந்த இவ்வழக்கு உடனடியாக முடிக்கப்பட்டது இப்பிரதிவாதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டு, இனியும் பயங்கரவாதத்தில் ஈடுபட மாட்டாதென உறுதி பூண்டு, இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை அங்கீகரிக்க சத்திய பிரமாணம் செய்த பிறகேயாகும். அதன் படி விடுதலையான இக்கும்பல் தற்போது தமது மத்தியதர குகைகளினுள் காலத்தை போக்கினும் நிலைமைகள் தமக்கு சாதகமென உணர்ந்த உடன் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக மத்தியதர வர்க்கத்தை ஒழுங்கு படுத்தும் அரசியலில் மீண்டும் குதிக்கும்.

இக்கும்பல் ஓர் குட்டி முதலாளித்துவ கெரில்லா இயக்கத்தை கட்டி எழுப்ப எடுத்த முயற்சியை மையமாக வைத்து இவ்வழக்கு ஆரம்பிக்கப்பட்டது. பொலிஸ் ஒற்றர்கள் மூலம் இவர்களை அரச வலையில் சிக்க வைத்ததன் பின் அவர்களுக்கு எதிரான வழக்கும், ஒடுக்குமுறையும், அவர்கள் நடாத்திய சில அரசியல் கலந்துரையாடலின் அடிப்படையில் எடுக்கப்பட்டது. இவர்களுடனான பாரிய கருத்து வேறுபாடுகளை பொருட்படுத்தாது, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நிபந்தனை இல்லாமல் இவர்களை விடுதலை செய்யுமாறு கோரி போராடியது, அதுவானது சகல அரசியல் கைதிகளையும் விடுவிக்க நாம் முன்னெடுத்து செல்லும் போராட்டத்தின் ஓர் அம்சமாகும். அப்போராட்டமானது, தொழிலாள வர்க்கத்தை தோற்கடித்து, அரச படைகளை வலுப்படுத்தி எதிர்ப் புரட்சியை தயாரிக்கும் முதலாளித்துவத்திற்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை சுயாதீனமாக அணி திரட்டுவதை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

அரச ஒடுக்குமுறைக்கு இலக்காகி இருந்த இக்குட்டி முதலாளித்துவ குழுவினுள் இரு முக்கிய பிரிவுகள் இருந்தன. அதனுள் 1970 ம் ஆண்டுகளில் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து பிரிந்து வீசப்பட்ட ஓர் பகுதியின் முக்கியஸ்தர்களாக இந்திக்க குணவர்தன ஜயதிலக்க சில்வா என்பவர்கள் உள்ளனர். மற்றைய பிரிவானது, 1980 வருடங்களில் ஜே. வி. பீ. யிலிருந்து பிளவுண்ட "புதிய போக்கு" என்பதாகும். ட்ரொட்ஸ்கிசத்தின் எதிரியும் நிலையில்லாத மத்தியதர வர்க்க அரசியல்வாதியுமான தயான் ஜயதிலக்க இக்கும்பலின் முக்கிய தத்துவவாதியாவர்.

இந்திக்க குணவர்தனவும், ஜயதிலக்க டி. சில்வாவும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களாக 1970 — 77 ம் ஆண்டுகளில், முதலாளித்துவ கூட்டரசாங்கத்தை பேணியும், தொழிலாள வர்க்கத்துக்கு அது விடுத்த தாக்குதல்களை பாதுகாத்து இருந்ததுடன் இன்று வரை அவ்வரசியல் குற்றங்களையும் பேணி வருகின்றனர். ஜயதிலக்க சில்வா கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு முக்கிய தத்துவவாதியாக விளங்கி ட்ரொட்ஸ்கிசத்திற்கு எதிரான சேரடித்தலில் ஈடுபட்டவராவர். இவ்வெல்லோரும், ஸ்டாலின், லியொன் ட்ரொட்ஸ்கி உட்பட்ட இடதுசாரி எதிர்ப்பை சங்காரம் செய்ததை இன்று வரை பேணும் ஸ்டாலினிஸ்டுகளாவர்.

தயான் ஜயதிலக்க இக்கும்பலுள் ஒரு விஷேட ஸ்தானமுள்ளவர். மாஓவாதிகளும், கம்யூனிஸ்ட் கட்சியின் கைக் கூலிகளும் கேடுகெட்ட பிறகு இலங்கையினுள் ஸ்டாலின் பஜனைக்காகவும், ட்ரொட்ஸ்கிச எதிர்ப்புக்காகவும் தமது அழுகிய பேனாவை கையில் எடுத்தவர் இவரே.

பாட்டாளி வர்க்க போராட்டத்திற்கு எதிராக குட்டி முதலாளித்துவ கெரில்லாவாதத்தை தூக்கி தாலாட்டுவதை தமது முக்கிய காரியமாகக் கொண்ட இவர் கிரனடா, கியூபா நிகரகுவா மற்றும் மத்திய அமெரிக்க குட்டி முதலாளித்துவ கெரில்லா தலைவர்களை வர்ணனை செய்தார். தமது சகாக்கள் சிறையில் இருந்த முழுக் காலமும் முதலாளித்துவ ஒடுக்குதலில் இருந்து தப்பி சென்ற இவர், வெளிநாட்டில் தமது இச் "சுப்பர்" புரட்சிகர கும்பலுடன் அலையும் பணியில் செலவிற்றுர். இக்காலத்தில் தமது சகாக்களை விடுவிக்க ஒரு கூட்டமோ, அல்லது ஐந்து பேர் கொண்ட ஒரு பிக்கடிங் கூட இவரால் ஒழுங்கு படுத்தபட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நிகரகுவாவினதும், கியூபாவினதும் மற்றைய நாடுகளினதும் கெரில்லா தலைவர்கள் இலங்கையில் ஒடுக்குதலுக்கு ஆளாகியுள்ள தமது சம — சிந்தனையாளர்களின் சார்பாக ஒரு சின்னி விரலேனும் உயர்த்தாமல் இருந்தது அவர்களுக்கு வேறு முக்கிய காரியங்கள் உள்ளதனாலாகும்.

இ கும்பல் முதலாளித்துவ அரசின் முன் மண்டியிட்டது. கடந்த காலத்தில் குட்டி முதலாளித்துவ கெரில்லாவாதம் ஏகாதிபத்தியத்தின் முன் அனைத்துலக ரீதியாக மண்டியிட்டதை இலங்கையில் எடுத்துக் காட்டியது

இலங்கையினுள் சுயாதீன மாணவர் சங்கம் ஈ. பீ. ஆர் எல். எவ்., குணசேன மகா நாம கும்பல், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் எச். என். பெர்னாந்து கும்பல் ஆகியவர்கள் இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை அங்கீகரித்ததன் மூலம் யூ. என். பி அரசாங்கத்துடன் ஒன்றிணைந்ததை கண்டோம் நிகரகுவாவின் சன்டினிஸ்டா இயக்கம் "கொன்ட்ரா" எதிர்ப்புரட்சிவாதிகளுடன் சமாதானத்தை உண்டு படுத்தி தொழிலாளரை தாக்க தொடங்கியுள்ளது. வியட்நாம் தலைவர்கள் கம்பூஜியாவின் போல்போட் கும்பலுடன் கூட்டரசாங்கம் நாட்டவும் வியட்நாமில் அமெரிக்க ஏகாதிபத்திய மூலதனத்தை நிலை நாட்டவும் வேலை செய்கின்றது. இவ்வெதிர்ப்புரட்சிகர குட்டி முதலாளித்துவ கெரில்ல வாதத்திற்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை ஆட்சி அதிகாரத்திற்காக சுயாதீனமாக அணி திரட்டும் முன்னோக்கின் மேல் அனைத்துலக ரீதியாக போராடுவது ட்ரொட்ஸ்கிச நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவேயாகும். ட்ரொட்ஸ்கிசத்தின் இந்த ஜன்ம எதிரிகள் தாம் சரணடைந்ததன் மூலம் ட்ரொட்ஸ்கிசத்தை கௌரவப்படுத்தியுள்ளனர். அவர்சள் மீண்டும் ஒரு முறை உறுப்படுத்தியுள்ளது. என்னவெனில், நான்காம் அகிலத்தின் அங்கத்தினருக்கு புறம்பாக எந்தவொரு புரட்சிகர சக்தியும் இப் பூகோளத்தின் மேல் இல்லை என்று லியொன் ட்ரொட்ஸ்கி 1938 இடைமருவு வேலைத்திட்டத்தில் கண்ட மூன் காட்சியேயாகும். கடந்த காலத்தில் இக் குட்டி முதலாளிகளுக்கு ஏமாறிய எந்தவொரு போராளியும் உடனடியாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணையுமாறு வேண்டுகின்றோம்.

# சர்வோதயம் மலையக இளைஞர்களின் உழைப்பை சூரையாடுகின்றது

சர்வோதயம் என்னும் இயக்கம் மலையகத்தின் படித்த தோட்டத் தொழிலாளர் இளைஞர்கள் பலருக்கு ஆசிரியர் வேலை வாங்கி தருவதாக கூறி அவர்களை ஏமாற்றி உள்ளதென அறிய வருகிறது. இவ்வியக்கமானது ஏகாதிபத்திய பிற்போக்கு நிதிகளினுலும் வேறு மர்மான நிதிகளினுலும் போஷிக்கப்படுவது யாவரும் அறிந்த்தே.

தோட்ட பாடசாலைகளில் ஆசிரியர் வேலை பெற்று தருவதாக கூறிக் கொண்டு மலையகத்தின் சகல பகுதிகளில் இருந்தும் 460 இளைஞர்கள் இளம் யுவதிகளை திரட்டி அவர்களுக்கு 15 நாள் "பயிற்சி" சர்வோதயத்தால் அளிக்கப்பட்டது. அத்தோடு சில மாதங்களுக்கு பின் ரூ. 750/= சம்பளம் தருவதாகவும் உறுதி கூறியது பிறகு 1987 நவம்பர் பாதம் தொடர்ந்து இவர்களை தோட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்தது. அன்று முதல் இன்று வரை கையால் சிலவு செய்து இவ்விளம் யுவதிகளும், இளைஞர்களும் "ஆசிரியர்" வேலையில் ஈடுபடுகின்றனர். ஆனால் இன்று வரை எந்தவிதமான வேறு ஊதியமோ அவர்களுக்கு வழங்கப்பட வில்லை தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்றும் தம்முடைய கனவுகள் சிதறடிக்கப்பட்டுள்ளது எனவும் இவர்கள் விரக்தியடைந்துள்ளனர்.

யூ என். பி உலக வங்கி திட்டங்களின் கீழ் தோட்ட பாடசாலைகள் அழிவடைந்து வருகின்றது. ஆசிரியர் குறைவால் பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றது. சர்வோதயம் போன்ற பிற்போக்கு இயக்கங்கள் இந்த பிற்போக்கு திட்டங்களை மூடி மறைக்கவே "பயிற்சியாங்கங்கள்" மலையகத்தில் உண்டு படுத்தி இயக தொடங்கி உள்ளது மலையக இளைஞர்கள் முகம் கொடுக்கும் தொழிலின்மை தீர்க்க யூ. என். பி. அரசாங்கம் ஒரு புறம் அவர்களை நூற்றுக் கணக்கில் சிறையில் அடைத்துள்ளது. மறுபுறத்தில் சர்வோதயம், கிரிஸ்தோதயம் போன்ற இயக்கங்களும் தொண்டமான் வீ. எல் பெரேரா போன்ற பிற்போக்கு தொழிற்சங்கவாத கபடர்களும் நானுவிதமான புரடர்க்களை முன்னெடுத்து வந்துள்ளனர் அவைகளுக்கு "பயிற்சிசாலைகள்" என இவர்கள் கூறிக் சொல்கின்றனர்கள்.

இளைஞர்களின் தொழில் வாய்ப்பை பேணக் கூடியது, சோஷலிச வேலைத்திட்டத்தை நடைமுறை படுத்தும் ஒரு தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்திற்கே யூ. என். பி. யை விரட்டியடித்து தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை நிலை நாட்ட போராடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து சர்வோதயம் போன்ற மர்மான முதலாளித்துவ கபட இயக்கங்களையும் அதன் பின்னுல் உள்ள எதிர்ப்புரட்சிகர சக்திகளையும் தகர்க்க முன்வருமாறு வேண்டுகின்றோம்.

# 11 அம்சக் கோரிக்கை இயக்கம்..

[5 ம் பக்கத் தொடர்ச்சி]

11 அம்சக் கோரிக்கையின் முதல் கட்டத்தில் அதன் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகளுக்கு விமசர்சனத்துடன் ஆதரவு அளித்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமானது அக்கோரிக்கை வெற்றி பெறுவது முதலாளித்துவ அமைப்பினை களைத்து விடுவதால் மட்டுமே உறுதிப்படுத்த படுகிறது என்றும் அதற்காக தொழிலாள வர்க்கம் தமது அனைத்துலகவாத புரட்சிக் கட்சியை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் சுட்டிக் காட்டி போராடியது. அப்போராட்டத்துள் சமசமாஜ — ஸ்டாலினிச — நவசமசமாஜ — இ. தொ. கா. தலைமைகள் அம்பலப்படுத்த படுவதற்கான அரசியல் போராட்டத்தின் ஒரு பிரிவாக இனவாத யுத்தத்திற்கு எதிராக தமிழ் தேசிய உரிமையை ஏற்று சோசலிச வேலைத்திட்டத்திற்காக போராடுமாறு இத்தலைமைகளை நிர்ப்பந்தி! என பு. க. கழகம் சமர்ப்பித்த சுலோகத்திற்கு எதிராக இந்த 11 கோரிக்கை இயக்க தலைமைகள் பொய் இடதுசாரி வார்த்தைகளை சமர்ப்பித்தன விசேடமாக இலங்கை ஆசிரியர் சங்கமும் அரசாங்க லிகிதர் சேவை சங்க சம்மேளனத்தில் இக்கோரிக்கைக்காக பு. க. கழக அங்கத்தவர்கள் பிரசாரம் செய்கையில், குணசேன மகாநாமவும் எச். என் பெர்ணாந்துவும் அதனை தாக்கியதன் ஊடாகவும் லங்கா — சமசமாஜ — கம்யூனிச துரோக தலைமைகளை பற்றி தொழிலாள வர்க்கத்துள் நப்பாசையை ஏற்படுத்துவதற்கு பெரும் பாடுபட்டன. இன்று இந்த மத்தியவாதிகள் சமசமாஜ ஸ்டாலினிச தலைமைகளின் பின் மட்டுமல்ல சிறீலங்கா மக்கள் கட்சி பின்னும் யூ. என். பி — காந்தி அரசாங்கங்கள் பின்னும் ஓடுகின்றனர்.

தாம் சமசமாஜ — கம்யூனிச தலைமைகள் பின் ஓடுவதில்லை என கூற இத்தலைமைகள் பிரயாசை படுகின்றன. சமசமாஜ கம்யூனிச தலைமைகள் தமது நடவடிக்கையை வேறுபடுத்தி வந்துள்ளதாக அவை கூறின. முதலாளித்துவ மக்கள் கட்சி இடதுசாரியாக திரும்பியுள்ளது எனவும் கூறின. பிற்போக்கு காந்தி அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தின் கீழ் யூ. என். பி. அரசாங்கம் ஒரு ஜனநாயக ஆட்சி சட்டத்தை ஏற்படுத்தி உள்ளதாயும் கூறுகின்றன. சமசமாஜ — கம்யூனிச தலைமைகள் பற்றிய நப்பாசைகளை ஊட்டி விடுவதாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை தாக்கிய குணசேன மகாநாம இன்று அவர்களுடன் தோளோடு தோள் பூண்டுள்ளார்.

தொழிற் சங்கவாத சீர்திருத்தவாத மத்தியவாத பிரிவினரான 11 அம்சக் கோரிக்கை தலைமைகளுக்கு அன்று சமர்ப்பித்த கோரிக்கைகளை நிறைவேற்ற முதலாளித்துவத்திற்கு எதிராக செய்யும் அரசியல் போராட்டத்திற்கு எந்த தமைத்துவத்தையும் வழங்க முடியாது முதலாளித்துவத்தை புரட்டியடித்து பாட்டாளி வர்க்க புரட்சியை வெற்றியீட்ட செய்யும் வேலைத்திட்டத்துடனான புரட்சி கட்சியால் மட்டுமே அதனை வழங்க முடியும். 11 அம்சக் கோரிக்கைக்கு ஆதரவு அளித்த அதே சமயத்தில் அதனை நிறைவேற்றும் அரசியல் பாதையை காட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தால் மட்டுமே முடிந்தமை தற்செயலானதல்ல புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தினை அடிப்படையாக கொண்டுள்ள உலக கட்சியின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையேயாகும்.

11 அம்சக் கோரிக்கை இயக்க தலைமைகளது அரசியல் நிச்சயமாக செயற்பட்டது இனவாதத்துக்கும் முதலாளித்துவ ஒடுக்கு முறைக்கும் எதிராக மூன் வந்த முன்னேறிய தொழிலாளர் பிரிவினை செயல் அற்றவராக்கி, சமசமாஜ ஸ்டாலினிச தலைமைகளுக்கு எதிராக நடத்த வேண்டிய போராட்டத்தில் இருந்து அவர்களை வெளியேற்றவே ஆகும். சமசமாஜ ஸ்டாலினிஸ்டுகளை அம்பலமாக்கி வர்க்க இயக்கத்தை தகர்க்க இம்மத்தியவாதிகள் காட்டிய எதிர்ப்பின் அர்த்தம் இதுவேயாகும்.

தமிழ் விடுதலை போராட்டத்திற்கு எதிராக பகிரங்கமாக இந்திய இராணுவ தலையீடு நடத்தி இந்திய உபகண்டத்தில் ஏகாதிபத்திய விருப்பு வெறுப்புக்களை பிரதிநிதித்துவ படுத்த இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர் எடுத்த தீர்மானமும் அதற்கேற்ப தொடுத்த இந்திய — இலங்கை ஒப்பந்தமும் உபகண்டத்தில் வர்க்க தொடர்புகளில் தீவிர மாறுபாடை ஏற்படுத்தியது. அது ஒன்றில் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை பேணும் ஏகாதிபத்திய எதிர்ப்புரட்சிகர தேவைக்கும் அதனை தோற்கடிக்க பாட்டாளி வர்க்கத்தை அணி திரட்டுவதையும் கோரி நின்றது. வேறெந்த வழியும் கிடையாது அதன் பிரகாரம் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்திற்கு எதிராக எதிர்ப்பு இயக்கத்தை — இடைபட்ட வழியை — கைவிட்டு முதலாளித்துவ அரசினை பேண தள்ளப்பட்டனர்.

குணசேன மகாநாமவும் எச். என். பெர்ணாந்து தலைமையும் தமது வலதுசாரி போக்கினை மூடி மறைக்க தாம் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடனும் மக்கள் விடுதலை முன்னணி இனவாதத்துக்கு எதிராக தமிழ் தேசியத்திற்கு ஆதரவு வழங்கவும் 'ஜனநாயகத்திற்கு' பக்க சார்பாயும் உள்ளதாக கூறினர். இந்த ''உதவியும்'' ஜனநாயகத்தை குலைப்பது என்பவை இந்திய இலங்கை பிற்போக்கு தலைமைத்துவத்தின் தீர்மானமாகும். இதற்கு மேலாக வேறு எதனையும் கோராத படி மாகநாம அரசாங்க லிகிதர் சேவை சங்க சம்மேளனத்தில் பேசினார். தமிழ் தேசியத்தை அடக்கும் இந்திய இராணுவத்தை அகற்ற அரசாங்க லிகிதர் சேவை சங்கமும் தொழிலாள வர்க்கமும் பிரசாரம் செய்ய வேண்டுமென யாழ்ப்பாண அரசாங்க லிகிதர் சேவை சங்க பிரதிநிதி செய்த கோரிக்கை குணசேன மகாநாமவினால் தாக்கபட்டதன் அர்த்தம் இதுவேயாம்.

இவை யாவும் தொழிலாள வர்க்கத்துக்கு எடுத்துக் காட்டிய பிரதம படிப்பினை ஒன்றாகும். சுய மரண கால கட்டத்தை அடைந்த முதலாளித்துவ அமைப்பு, சகல கூப்பாட்டுக்கு இடையிலும் பகிரங்க சேவை செய்ய அணி திரளுகையில் மத்தியவாதிகள் இடையே தொடுக்கப்பட்ட கூட்டினால் ''போராளி தொழிலாள வர்க்க மத்தியஸ்தானம்'' கட்டியெழுப்பப்பட்டு விட முடியாததென்பதே அது.

முதலாளித்துவ அமைப்பினை தூக்கி எறிய முதலாளித்துவ ஆட்சியை தகர்க்க தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டும் புர[illegible] கட்சி ஒன்றுக்கு வழி[illegible] டாது எர்தவொரு [illegible] டை உரிமையுமே வெ[illegible] டுக்க முடியாது என[illegible] இவ்வியக்கம் நன்கு எடுத்து காட்டியுள்ளது. மிக சுயமாக ஸ்டாலினிசமும் சீர்திருத்தவாதத்தையும் பேணும் பொறுப்புக்கு உரம் ஊட்டி உள்ள இந்த மத்தியவாதிகள் இவ்வுபகண்டத்தில் ஏகாதிபத்தியதினதும் முதலாளித்துத்தினதும் நலனுக்காக முன் வந்துள்ளதும் காட்டப்படுகின்றது.

இந்த நச்சுத் தன்மையான மத்தியவாதத்திற்கு எதிராக இந்திய — இலங்கை படையை வடக்கு — கிழக்கில் இருந்து விரட்டி விட போரரடி தமிழ் இனத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவும் விவசாயிகளதும் நிச உரிமையை உட்பட்ட சகல ஒடுக்கப்பட்டவரது உரிமைகளை வென்றெடுக்கவும் தொழிலாள வர்க்கம் முன்வர வேண்டும் என நாம் கூறுகின்றோம்: உரிமைகளை சிதைக்கும் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை புரட்டியடிக்கவும் தொழிலாள விவசாயிகளது அரசாங்கத்தை கொண்டு வரவும் அணி திரட்டபட வேண்டும் எனவும் நாம் தெரிவிக்கின்றோம் அப்போராட்டத்தினுல் தொழிலாள வர்க்கத்தில் இருந்து விலகி உள்ள லங்கா சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ தொ. கா. குழுவையும் அவர்களது வால்பிடியான மகாநாம, எச். என் பெர்ணாந்து' அன்டன் மாகஸ், மல்லவராச்சி மத்தியவாத தலைமைகளையும் அரசியலில் தோற்கடித்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணையுமாறு 11 அம்சக் கோரிக்கை இயக்க தொழிற் சங்க தொழிலாளரிடமும் நாம் கோருகின்றோம்.

# தோழர் கீர்த்தி பாலசூரிய நினைவுக் குறிப்பு

★ 4 ம் பக்கத் தொடர்ச்சி

பரந்த ஆதரவினைப் பெற்றோம். யாழ்ப்பாணத்திலும் ஹற்றன் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலும் நாம் நடாத்திய கூட்டத்தை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இது இனப் பிரிவினைகளுக்கும், அதற்கு ஆதரவு நல்கிய சமசமாஜ — கம்யூனிச அரசியலுக்கும் எதிரான போராட்டமாக விளங்கியது.

அத்தோடு அது சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்களின் 1964 ம் ஆண்டின் மாபெரும் காட்டிக் கொடுப்புக்கும் 1972 ல் சமசமாஜ தலைவர் கொல்வின் ஆர். டி சில்வாவின் இனவாத அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் இரண்டாகக் கூறு போடப்பட்ட சிங்கள — தமிழ் தொழிலாள வர்க்கத்தை, இரண்டு இனங்களையும் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக ஒருங்கிணைக்கும் அரசியலுடன் இணைந்திருந்தது.

இன்று சமசமாஜ — கம்யூனிஸ்ட் — நவசமசமாஜ தலைவர்களுடன் ஒரே பொறியில் இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு தோள் கொடுக்கும் அரசாங்க லிகிதர் சேவைச் சங்க தலைவர் குணசேன மகாநாம துரோகி இந்திய — இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து தஞ்சமீன ஆதரவு நோரும் தமிழ் தொழிலாளர்களின் முகத்தில் காறி உமிழ்கையில் எமது ஆத்திரம் இந்த கடந்த கால அனுபவங்களால் இரு மடங்காகின்றது.

## ஓடுகாலிகள்

அன்று நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தலைமையல [illegible] ஹீலி — பண்டா — சுலோட்டர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் துல்கிரிய காரியாளர்களைக் காக்கும் பொருட்டு எந்த ஆதரவும் வழங்கவில்லை அவர்கள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும் அதன் காரியாளர்களையும் நாசமாக்க திடசங்கற்பம் பூண்டிருந்தார்கள் என்ற தோழர் கீர்த்தி பாலசூரியவும், அனைத்துலகக் குழுவும் எழுப்பிய பலத்த குற்றச்சாட்டு நியாயமானது என்பதைப் புலப்படுத்தியது.

வேர்க்கஸ் லீக்கின் டேவிட் நோர்த்தினால் கீர்த்தி பாலசூரியா ஏமாற்றப்பட்டதாகவும், தோழர். கீர்த்திக்கும் சுலோட்டருக்கும் இடையே 1985 அனைத்துலகக் குழுவின் பிளவின் பின்னர் பேச்சுவார்த்தை இடம்பெறுவதைத் திட்டமிட்டு தடுத்ததாகவும் சுலோட்டர் தனது பத்திரிகை பக்கங்களில் எழுதுவது அப்பட்டமான பொய்யாகும் என நாம் அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துக்கும் கூறி வைப்போம்.

தோழர். கீர்த்திக்கும் அனைத்துலகக் குழுவில் இரு

★ 8 ம் பக்கம் பார்க்கவும்

# ...ம்கறு மாவத்த" "தொழிலாளர் பாதை"..

★ முன் பக்கத் தொடர்ச்சி

...பொருளாதார வீழ்ச்சியின் அளவுக்கு உக்கிரமடைந்... உள்ளதை கடந்த அக்டோபர் 19 ம் திகதி ...க பங்கு ...ந்தைகளின் வீழ்ச்சியின் மூலம் அம்...மானது. பங்குச் சந்தையின் இவ்வீழ்ச்சியானது ...30 ம் ஆண்டுகளில் ஜெர்மனிய, ஸ்பானிய பாசி...திற்கும் காலனித்துவ நாடுகளை இரத்தத்தினுல் ...க்கவும், இரண்டாம் உலக யுத்தத்திற்கும் பத்து வருடங்களுள் ஏகாதிபத்தியவாதிகளை தள்ளிச் சென்ற 1929 வோல் ஸ்ரீட் வீழ்ச்சியையும் தாண்டி உள்ளது. தம் சொத்துடமைகளையும், பிற்போக்கு அரசமைப்பையும் பேணுவதற்காக உலக மக்கள் இது வரை காணுத, கேட்காத மட்டத்திலான அழிவை அவர்கள் மத்தியில் திணிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் ஏஜன்டுகளான முதலாளித்துவ ஆட்சியாளர்களும் தயார் செய்யும் திட்டங்கள் நிச்சயமாக இதன் பின் அடங்கியுள்ளது.

உலக தொழிலாள ஒடுக்கப்படும் மக்கள் தற்போது ஈடுபட்டுள்ளதும், நாளை ஈடுபடவிருக்கும் போராட்டங்கள் ஏகாதிபத்தியத்தை உலகத்தில் இருந்து அழித்து விடுவதற்காக புரட்சிகர ஐக்கியத்திற்கு உள்ளாக்கும் அவசியத்தை இனநெருக்கடி நிச்சயமாக வேண்டி நிற்கின்றது.

உலக சோசலிச புரட்சிக்கான பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் மேல் கட்டியெழுப்பப்படும் தொழிலாள வர்க்க ஐக்கியத்தை சிதறடிப்பதற்காக எல்லா நாடுகளிலும் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் பேரினவாதத்தையும், இனவாதத்தையும் கிளப்புவதில் ஈடுபட்டுள்ளனர். உலகம் முழுவதிலும் உள்ள திரிபுவாத, ஸ்டாலினிச மத்தியவாத துரோகிகள் முதலாளித்துவ தேசியவாதத்தின் இவ்விரத்தம் தோய்ந்த பதாகையை ஏந்தியிருக்கின்றனர்.

தமிழ் விரோத இனவாத யுத்தத்திற்கும் அதை முன்னெடுத்துச் செல்லும் முதலாளித்துவ அரசுக்கும் எதிராக சிங்கள — தமிழ் தொழிலாள வர்க்க ஒற்றுமை வளர்ச்சியை இரத்தத்தில் மூழ்கடிக்கும் நோக்கமாக இலங்கை முதலாளித்துவ ஆட்சியாளரும், இந்திய காங்கிரஸ் ஆட்சியாளரும் கூட்டுச் சேர்ந்து கைச்சாத்திட்டுள்ள இந்திய — இலங்கை ஒப்பந்தத்திற்கு சமசமாஜ, கம்யூனிஸ்ட் மத்தியவாத தலைமைகள் அளித்துள்ள ஆதரவு இக்கேவலமான கொள்கையை நன்ருக எடுத்துக் காட்டுகின்றது.

நாற்றமெடுத்துள்ள இந்திய — இலங்கை முதலாளித்துவ ஆட்சியாளருக்கு இத்துரோகிகளின் முண்டு கொடுத்தலின் எதிர்ப்புரட்சிகர விளைவுகள் சில நாட்களுக்குள்ளேயே வெளிக் கண்டது. தமிழ் ஈழத்தை ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் இந்திய துருப்புகள் ஆக்கிரமித்துள்ளதையொட்டி கிட்டிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலங்கை அரச படைகளை தென் பகுதியிலும் தோட்ட புறத்தினதும் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்க உடனடியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 7 மாதத்திற்குள் 1400 தமிழர்களை கொலை செய்து ஆயிரமாயிரம் மக்களை அகதிகளாக்கி இந்திய படை "பெரும் காரியத்தை" சாதித்துள்ளது. 100 மலையக தொழிலாளர், இளைஞர்களையும் நூற்றுக்கணக்கான சிங்கள இளைஞர்களையும் சிறையிலிட்டும் சித்திரவதை செய்தும் சிங்கள படைகளும் "மகத்தான காரியத்தை" சாதித்துள்ளது. காணுமல் போனவர்கள் எண்ணிலடங்காது.

முதலாளித்துவ சொத்துடமையையும், அரசையும் பாதுகாப்பதற்காக இச்சகல துரோகிகளும் அழைக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவம் முகம் கொடுத்துள்ள பாரிய நெருக்கடியை சுட்டிக் காட்டுகின்றது. இந்நிலைமையின் மத்தியில் இலங்கையினதும், தமிழ் ஈழத்தினதும், இந்திய உபகண்டத்தினதும், உலகம் பூராவும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை உலக சோசலிச புரட்சிக்காக ஆயத்தப்படுத்துவது ஒரே புரட்சிகர கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு மட்டுமே.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் "கம்கறு மாவத்த" பத்திரிகையை 12 பக்கமாக வெளியிட்டும், "தொழிலாளர் பாதை" பத்திரிகையை 12 பக்கமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தும் முன்னேறுவது இவ்வரலாற்று ரீதியான போராட்டத்தின் பங்காளியாக வென்றெடுத்த வெற்றியின் அடிப்படையிலேயே ஆகும்.

இப்போராட்டத்தின் தலைமை பாகத்தை ஈட்டிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மறைந்த பொதுச் செயலாளர் தோழர். கீர்த்தி பாலசூரியவின் பெயரில் நிறுவப்பட்ட அபிவிருத்தி நிதிக்காக உதவி புரிந்த சகலருக்கும் நம் பத்திரிகையின் வெற்றிகர வளர்ச்சி மகிழ்ச்சியை ஊட்டும் என்பதில் ஐயம் இல்லை. கூட்டும் பக்கங்களின் ஊடாக உலக புரட்சிகர இயக்கத்தின் சகல வரலாற்று பாடங்களினுலும், நிகழ்கால பாடங்களினுலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களினது போராளிகளை ஆயுத பாணிகளாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தொழிலாள வர்க்கம், ஒடுக்கப்பட்ட தமிழினம் உட்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னெடுத்துச் செல்லும் சகல போராட்டங்களையும் உலக புரட்சிகர மூலோபாயத்தின் அடிப்படையில் ஆய்ந்து, அவைகளை வெற்றிப் பாதையிலிட்டுச் செல்லும் விஞ்ஞான ரீதியான முன்னேக்கினையும் வேலைத்திட்டத்தினையும் சிருஷ்டிக்க எமது பத்திரிகைகளுக்கு கூடிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

முதலாளித்துவ நெருக்கடியின் விளைவாக பத்திரிகை அச்சிடும் காகித விலையேற்றத்தாலும் அச்சக சிலவு கூடியிருப்பதாலும் 12 பக்க பத்திரிகையின் விலை ரூ. 2.50 சதமாக உயர்த்த நேரிட்டுள்ளது. ஆனல் கடந்த காலத்தை போலவே கட்சியின் முக்கிய ஆயுதமான பத்திரிகையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளும் தொழிலாளர் — ஒடுக்கப்படும் போராளிகளை வென்றெடுத்து பத்திரிகையை கூடிய வாசகர்கள் மத்தியில் நிறுவும் நிலைமைகளை இம்மாற்றத்தின் மூலம் வென்றெடுக்க முடியும் என்பது எமது நம்பிக்கை.

★ "கம்கறு மாவத்த" "தொழிலாளர் பாதை" வாழ்க!

★ நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வாழ்க!

## தோழர். கீர்த்தி பாலசூரிய

★ 7 ம் பக்கத் தொடர்ச்சி

...ந்து ஓட்டம் எடுத்த ஒடுகாலிகளுக்கும் இடையே ஈடு செய்ய முடியாத பிளவு உருவாகிற்று. இது தோழர். கீர்த்தி பிரதிநிதித்துவம் செய்த ட்ரொட்ஸ்கிச அனைத்துலகவாத போக்குக்கும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்த தேசியவாத குட்டி முதலாளித்துவ போக்குக்கும் இடையேயான பிளவே அன்றி வேறொன்றும் அல்ல.

தோழர். கீர்த்தி மரணமான போது அவரையிட்டு அனுதாப அறிக்கை வெளியிட முன் வந்த கிளிப் சுலோற்றருக்கும் அவர் நடாத்திய போராட்டத்தை திரிபு செய்யும் அவருக்கு சேறடிக்கவும் முன் வந்த ரீ. அந்திராதிக்கும் நாம் அளிக்கும் பதில் ஒன்றே.

தரித்திரம் பிடித்த இவர்கள் தோழர். கீர்த்தியின் மரணத்துடன் அவர் 20 ஆண்டுகளாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துள்ளும் அனைத்துலகக் குழுவினுள்ளும் நடாத்திய போராட்டம் செத்து விட்டதாக நினைத்துக் கொண்டார்கள். இல்லை! அது அப்படியல்ல. அவர் நடாத்திய போராட்டம் எம்முள்ளும், அனைத்துலகக் குழுவின் உள்ளும் உயிர் வாழ்கின்றது. அதனை உலக பாட்டாளி வர்க்கத்தினுள் உயிர் வாழச் செய்ய நாம் சளைக்காது போராடுவோம். இறுதிக் கணம் வரை அவர் காத்துப் போராடி வந்த அடிப்படைக் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் மட்டுமே உலக ஏகாதிபத்திய முழு நெருக்கடியும் உக்கிரமாகி உள்ள வர்க்கப் போராட்டத்தினுல் முன் நோக்கி தள்ளப்படும் காலனித்துவ, அரைக் காலனித்துவ நாடுகளின் மக்களும் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர்களும் உலக ஏகாதிபத்தியத்தின் உள்ளும் அதன் ஏஜன்டான ஸ்டாலினிசத்துக்கும் தீர்க்கமான தாக்குதல் தொடுப்பதற்கான பாதையை காட்டுகின்றது.

தொழிலாள வர்க்கத்தை இன ரீதியிலும் பிரித்து பலவீனப்படுத்துவது உலக ஏகாதிபத்தியத்தின் உள்ளும் தேசிய முதலாளி வர்க்கத்தின் உள்ளும் வழங்கும் நல்லதோர் வாய்ப்பாகும். சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ மத்தியவாதிகளும், இவர்களின் வாலில் இழுபட்டுச் செல்லும் அரசாங்க லிகிதர் சேவை சங்க இலங்கை ஆசிரியர் சங்க தலைவர்களும் இப்பணியிலேயே ஈடுபட்டுள்ளனர்.

இந்திய — இலங்கை உடன்படிக்கையை ஆதரிப்பதன் மூலம் சிங்கள — தமிழ் தொழிலாள வர்க்கத்தை இரண்டாகப் பிரிக்கும் இத்துரோகிகள், இந்திய தொழிலாள வர்க்கத்தில் இருந்து இலங்கைத் தொழிலாள வர்க்கத்தை பிளவு படுத்தவும் நனவாக செயற்படுகின்றார்கள். யூ. என். பி. அரசாங்கத்துக்கு எதிராகத் தோன்றி உள்ள தொழிற்சங்கப் போராட்டங்களை அந்தந்த இடத்தில் சிறைப் பிடித்து வைப்பதன் மூலம் தொழிலாளர்களை பிராந்திய ரீதியில் பிரிக்கின்றார்கள்.

இவர்களின் இந்த துரோக வேலைத்திட்டங்களைத் தோற்கடித்து, உலகச் சோசலிசப் புரட்சியின் மூலோபாயத்துடன் இணைந்த வேலைத்திட்டத்தைக் கொண்ட புரட்சித் தலைமையை தொழிலாள வர்க்கத்தினுள் உறுதி செய்யப் போராடுவதே தோழர். கீர்த்தியை நினைவு கூர்வதற்கான வழியாகும்.

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு — 10, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினல் பஹரகம நாகஹவத்தை வீதி 51 ம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.